பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 21 புதன்கிழமை 06.08.2025 கதிர் 270

## இனி இது ரகசியம் அல்ல!

பாடசாலை மாணவியான கிருஷாந்தி, அவரது தாயார், தம்பி மற்றும் அயலவர் ஆகியோர் கொன்று புதைக்கப்பட்ட வழக்கில் கொலைத் தண்டனைத் தீரப்புப் பெற்ற ☞ 2

# அரச அதிகாரிகளைப் பலவீனப்படுத்தும் வகையில் ஆளும்தரப்புச் செயற்படுகிறது

### நாமல் ராஜபக்ச நாடாளுமன்றில் குற்றச்சாட்டு

அரச அதிகாரிகளை மலினப்படுத்தும் வகையில் ஆளும்தரப்பு செயற்படுகிறது. முன்னாள் கடற்படை தளபதி கைது செய்யப்பட்டு அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இவரை அடையாளம் காண்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் புலனாய்வு பிரிவின் பிரதானி அழைக்கப்பட்டுள்ளார். இது முற்றிலும் தவறானது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் ☞ 2

# அரசியல் பாதுகாப்பு கிடைக்காத காரணத்தாலேயே பாதாளக் குழுக்கள் துப்பாக்கிச் சூடு நடத்துகின்றன

### புது விளக்கம் சொல்லியிருக்கிறார் பாதுகாப்பு அமைச்சு செயலர்

பாதாள உலகக் குழுக்களால் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. பாதாள உலக குழுக்களை இல்லாதொழிக்கும் தற்போதைய ஆளும்தரப்பின் வேலைத்திட்டத்தினால் அவர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். பாதாள உலகக்குழுகளுக்கு அரசியல் ரீதியாக பாதுகாப்பு பெறமுடியாது உள்ளது. இதன் காரணமாகவே துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் அதிகம் இடம் பெறுவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 3

## செம்மணி - 141

### நேற்றும் 6 புதிதாக வெளிப்பட்டன



யாழ்ப்பாணம் செம்மணிப் மனித புதைகுழிகளின் ஒரு பகுதியான அரியாலை, சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் தோண்டப்படும் குழிகளில் இருந்து நேற்றும் புதிதாக 6 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டு தொகுதிகளில் 4 முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

சிந்துப்பாத்தி மயானத்தில் ☞ 6

# சர்வதேச விசாரணையில் சாட்சியமளிக்க சோமரத்ன ராஜபக்சவை தயார்ப்படுத்துக

### சிறீதரன் எம்.பி. நாடாளுமன்றில் உரை

செம்மணி தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றை முன்னெடுக்கவேண்டும். அதில் தான் சாட்சியமளிக்க தயார் எனக் கொலைத் தண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஆகவே சர்வதேச விசாரணைக்கு சோமரத்ன ராஜபக்சவை தயார்படுத்துங்கள். உண்மைகள் வெளியே வரட்டும். செம்மணி குறித்து சோமரத்ன ராஜபக்சவின் மனைவி அரசுத் தலைவர்க்கு அனுப்பிய கடிதம் தொடர்பில் ஆளும்தரப்பின் நிலைப்பாடு என்னவென்று கேள்வியெழுப்பினார் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பால் பொலிஸ்மா அதிபரான தேசபந்து தென்னகோனுக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையானது மிகப்பெரும் அநீதிக்கு எதிரானது. மக்கள் பட்டதுயரங்கள் இஅனுபவித்த சித்திரவதைகள், இங்கு நடந்த ☞ 2

# செம்மணியில் சான்றுப் பொருட்களை நேற்று 200 பேர் பார்வையிட்டனர்

செம்மணி மனித புதைகுழிகளில் ஒன்றான அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் இருந்து மீட்கப்பட்ட தனிநபர்கள் சார் சான்றுப்பொருட்களை நேற்று சுமார் 200 பேர் பார்வையிட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை மாணவியான கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாயான சோமரத்ன ராஜபக்சவால் வெளிப்படுத்தப்பட்டது செம்மணிப் புதைகுழி. இந்த வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட 5 படையினர் காட்டிய இடங்களில் இருந்து செம்மணி மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டன. அவற்றிலிருந்து 15 பேரின் எலும்புக்கூடுகளும் எலும்பு எச்சங்களும் 1999ஆம் ஆண்டில் மீட்கப்பட்டிருந்தன.

அதன் பின்னர் அந்த வழக்கு கிடப்பில் போடப்பட்டிருந்த நிலையில், அரியாலை சிந்துப்பாத்தி மயானத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக நிலத்தைத் தோண்டியபோது மனித எலும்புக்கூடுகள் வெளிப்பட்டதைத் தொடர்ந்து, செம்மணிப் புதைகுழிகளின் இரண்டாவது பாகம் வெளிப்பட்டது. தற்போது தோண்டப்பட்டுவரும் புதைகுழிகளில் இருந்து நேற்றுவரையில் 141 எலும்புக் கூடுகளும் மனித எலும்பு எச்சங்களும் அடையாளம் காணப்பட்டு மீட்கப்பட்டு வருகின்றன. ☞ 2

## விசா முடிந்தும் தங்கியிருந்த 219 வெளிநாட்டவர்கள் கைது

விசா காலம் முடிந்த பின்னரும் நாட்டில் தங்கியிருப்போர் மற்றும் கடவுச்சீட்டு ஆவண மோசடி தொடர்பில் இதுவரை 219 வெளிநாட்டுப் பிரஜைகளை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் கைது செய்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ☞ 6

# சோமரத்ன ராஜபக்சவின் பாதுகாப்பை பலப்படுத்த உடனடி நடவடிக்கை தேவை

### அவரது சகோதரி கோரிக்கை

செம்மணி தொடர்பில் சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அதில் சாட்சியம் அளிப்பதற்குத் தயாராக இருப்பதாக மனைவியின் கடிதத்தின் ஊடாக தனது சகோதரரான சோமரத்ன ராஜபக்ச கூறியிருப்பதன் விளைவாக அவரது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என்பதால், அவருக்குரிய பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என சோமரத்ன ராஜபக்சவின் சகோதரி ரோஹினி ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

யாழ். செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில், அதில் சாட்சியமளிப்பதற்குத் தயாராக இருப்பதாக கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டு அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அத்தோடு போர்க் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் நடாத்தப்பட்டுவந்த சித்திரவதைக்கூடங்கள் என்பன ☞ 2

# குற்றவாளியான தேசபந்து தென்னகோன் சட்டத்தால் தண்டிக்கப்படவேண்டியவர்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

நாட்டின் பொலிஸ்மா அதிபர் சட்டவிரோதமான முறையில் சிவில் பிரஜைகள் உள்ள பகுதியில் துப்பாக்கிச்சூட்டை மேற்கொள்ள பொலிஸ் அதிகாரிகளை ☞ 6

# இளைஞர் கழக உருவாக்கம் மற்றும் மறுசீரமைப்பு என்ற பெயரில் தனது நண்பர்களுக்கு நன்மை பெற்றுத் தர ஆளும்தரப்பு முயற்சி

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

சகல இளைஞர் கழகங்களின் சட்டப்பூர்வத் தன்மையையும் இரத்துச் செய்து, புதிய இளைஞர் கழகங்களை தாபித்தல் அல்லது மறுசீரமைத்தல் செயல்முறை இளைஞர் கழக அமைப்பினது இறையாண்மை, ஜனநாயக செயல்பாட்டை ஆபத்தில் ஆழ்த்தி, புதிய கட்டளைகள் மூலம் தமது அரசியல் நண்பர்களுக்கு அரசு நன்மையைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியாக தெரிகிறது, அத்துடன் இளைஞர் கழகங்களை இளைஞர் இயக்கமாக மாற்றி, அதன் இலச்சினையையும் மாற்ற நடவடிக்கை எடுகப்பட்டுள்ளது என ☞ 2

# தேசபந்துவை பதவி நீக்கிவிட்டு அதற்கு காரணமான அரசியல்வாதிகளைப் பாதுகாக்கின்றது ஆளும்தரப்பு

### முஜிபுர் ரஹ்மான் எம்.பி. குற்றச்சாட்டு

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் பதவியை துஷ்பிரயோகம் செய்த காரணத்தினால் அவரை பதவியில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கும் ஆளும்தரப்பு, அவர் அவ்வாறு செயற்பட காரணமாக ☞ 3

## இனி இது .....

முன்னாள் தரைப் படைச் சிப்பாய் சோமரத்ன ராஜபக்ச, தான் ஒரு 'விசில் புளோவராக' மாறுவதற்குத் தயாராக இருக்கிறார் என்று அறிவித்திருக்கிறார்.

செம்மணிப் புதைகுழிகளை முதன் முதலில் தமிழ் மக்களுக்கும் உலகத்திற்கும் வெளிப்படுத்தியவரே அவர்தான். அப்போது அவருக்கு கொலைத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்த தருணம். நீதிமன்றத் தீர்ப்பைக் கேட்ட தன்பின்னர் அதனால் ஏற்பட்ட விரக்தி, கோபம், வெறுப்பு ஆகியவற்றின் காரணமாகவே அவர் செம்மணிப் புதைகுழிகள் பற்றிய தகவல்களை வெளியிட்டார் என்று கருதப்பட்டது. அப்போதைய அயலுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும்கூட இந்த வகையில்தான் வெளிநாடுகளுக்கு விளக்கமளித்தார். ஒரு கொலைக் குற்றவாளியின் பழிவாங்கும் கூச்சல் என்ற வகையில் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

ஆனால் தண்டனைத் தீர்ப்பைப் பெற்று 26 வருடங்களின் பின்னரும், அவரது மேன்முறையீடுகள், பொது மன்னிப்புக்கான கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட நிலையிலும் சிறைச்சாலையில் பல தரப்பட்ட அழுத்தங்களுக்கும் தேச பக்தி மற்றும் படையினரின் விசுவாச உணர்வு என்பன போன்ற அழுத்தங்களுக்கும் உட்படுத்தப்பட்ட நிலையிலும் அவர் செம்மணியின் உண்மைகளை மீண்டும் வெளிப்படுத்தத் தயார் என்று அறிவித்திருப்பது, இலங்கைத் தரைப்படையின் உண்மையான 'விசில் புளோவராக' அவரை மாற்றியிருக்கின்றது.

பேருண்மைகளை வெளிப்படுத்துவோரை அதிலும் தம் பணி சார்ந்த இடங்களிலிருந்தே உண்மைகளை வெளிப்படுத்துவோரைத்தான் 'விசில் புளோவர்கள்' என்று கூறுவார்கள். இது மிகமிக ஆபத்தான பணி. 'விசில் புளோவர்கள்' துரத்தித் துரத்தி வேட்டையாடப்படுவார்கள். அமெரிக்க அரசின் அசிங்கங்களையெல்லாம் அம்பலப்படுத்திய ஜூலியன் அசாஞ்சே என்கிற 'விசில் புளோவருக்கு' என்ன நடந்தது என்பதை உலகமே பார்த்தது. ஜனநாயகத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் ஊடக சுதந்திரத்தையும் பற்றி அதிகம் பேசும் அமெரிக்காதான் அவரை வேட்டையாடத் -துடியாய் துடித்தது. விரட்டி விரட்டி பாய்ந்தது. உலகம் முழுக்கத் தப்பி ஓடப்பார்த்த அவரை விட்டாமல் துரத்தியது. பல வழக்குகள் பல நாடுகளில் போடப்பட்டன. விளைவாகப் பல வருடங்களை அவர் சிறைகளில் கழிக்கவேண்டியிருந்தது.

இப்போது தன்னையும் ஒரு 'விசில் புளோவராக' அறிவித்துள்ள சோமரத்ன ராஜபக்சேவுக்கும் இனித்தான் ஆபத்துக்கள் அதிகம் இருக்கின்றன. அவர் ஏற்கனவே சிறைக்குள்ளேயேதான் இருக்கிறார். இலங்கைச் சிறைகள் அரசியல் கொலைகளுக்குப் பெயர் போனவை. எனவே இப்போ-து 'விசில் புளோவராக' மாறுகின்ற சோமரத்ன ராஜபக்சவை இந்தச் சிறைச் சுவர்கள் எப்படி நெரிக்கும் என்பதை வெளி உலகு தெரிந்துகொள்ள முடியாது. ஒரு நாள் அவர் "தன் தவறுகளுக்காக வருந்தித் தற்கொலை செய்து கொண்டார்'' என்று செய்திகள் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே அதற்கு முன்பாக சோமரத்தினவிடமிருந்து உண்மைகளைப் பெறுவதற்கும் அவரைப் பா-காப்பதற்கும் தமிழ் கூறு நல்லுலகும் மனித உரிமை அமைப்புக்களும் தீவிரமாகச் செயலாற்ற வேண்டியிருக்கிறது.

வெளிவர இருக்கும் பல உண்மைகளுக்காக ஒரு கொலையாளியைப் பாதுகாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதுமட்டுமல்ல, கிருஷாந்தி கொலை வழக்கும்கூட மீள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவது மேலும் பல உண்மைகளை வெளிப்படவைக்கும். அதற்கான சட்ட வாய்ப்புக்களைப் பற்றி நான் அறியேன். ஆனால், கிருஷாந்தி கொலை வழக்கில், செம்மணி காவல் நிலையத்தில் அந்தச் சமயத்தில் கடமையில் இருந்த ஒரு பிளாடூன் மட்டுமே பலிக்கடாவாக்கப்பட்டது. இராணுவக் கட்டமைப்பில் அதிலும் இலங்கை இராணுவக் கட்டமைப்பில் மேலதிகாரிகளின் உத்தரவின்றி இத்தகைய குற்றத்தைப் புரியும் துணிவு போர்க்களத்தில்கூட சிப்பாய்களுக்குக் கிடையாது. அப்படியிருக்கும்போது, கிருஷாந்தி கொலை வழக்கின் குற்றச்சாட்டு சிப்பாய்கள் மீது மட்டுமே, அதிலும் இராணுவப் பொலிஸார் இந்தச் சிப்பாய்களிடமிருந்து பெற்றதாகக் கூறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையிலும் அதை ஆதரிக்கும் வகையில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் முன்வைக்கப்பட்ட சான்றாதாரங்களின் அடிப்படையிலும்தான் இந்தச் சிப்பாய்கள் மட்டுமே குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அது அப்படி நடந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதை இந்த உலகமே அறியும். அதனால் சோமரத்ன ராஜபக்சவின் நியாயங்களும் கேட்டகப்படவேண்டியவையே என்பதைத் தமிழர்களும் மறந்துவிடக்கூடாது. அவரைக் கொலையாளி என்ற இடத்திலிருந்து ஒரு 'விசில் புளோவர்' என்ற இடத்திற்கு நகர்த்துவதில் தமதிழர்களின் பங்கு அதிகம் இருந்தாக வேண்டும். .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சர்வதேச ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித குலத்திற்கு எதிரான குற்றங்களோடு சம்பந்தப்பட்ட ஒரு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிரானது என்பதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

அவருடைய பதவி நீக்கம் என்பதற்கு அரசு கொண்டு வந்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவும் தயார். காரணம் நாமும் இதே துன்பங்களை, சித்திரவதைகளை, சந்தித்த ஒரு இனம் என்ற வகையிலும் தொடர்ச்சியாக இந்த நாட்டிலே பல்வேறுபட்ட பொலிஸ் அராஜகங்களுக்கும் இராணுவ அராஜகங்களுக்கும் முகம் கொடுத்து இன்றுவரை வாழ்கின்ற இனம் என்ற அடிப்படையில் இந்த பிரேரணைக்கு ஆதரவளிக்கின்றோம்.

நீதி என்பது அனைவருக்கும் சமமானது. சட்டத்துக்கு முன்னாள் அனைவரும் சமம் என்றால் இந்த நாட்டில் இருக்கின்ற தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள்,பறங்கியர் என்ற எல்லா இனம் சார்ந்தவர்களும் நீதியின் முன் சமமாக மதிக்கப்பட வேண்டும் நியாயாதிக்கம் பேணப்பட வேண்டும் . நாட்டினுடைய சட்ட ஆட்சி நேர்மையானதாக இருக்க வேண்டும். அந்த சட்ட ஆட்சி நாடாளுமன்ற ஆட்சியின் ஊடாக ஒரு தீர்ப்பை மக்களுக்கு சொல்லக் கூடியதாக இருக்க வேண்டும்.அந்த வகையில் தேசபந்து தென்னக்கோன் நடந்து கொண்ட முறைக்கும் அவரின் சித்திரவதை கூடங்களுக்கும் அவர் இந்த நாட்டில் செய்த அநியாயங்களுக்கும் தீர்ப்பு கிடைக்க வேண்டும். அதில் நாம் தெளிவாக இருக்கின்றோம்.

இந்த நாட்டில் அதிகளவு துன்ப,துயரங்களை அனுபவித்தவர்கள் தமிழர்கள். 1998 ஆம் ஆண்டு சி.எஸ்.யு.என்னை வவுனியாவில் கைது செய்தது. 26 வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு பொலிஸாரால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு 26 நாட்களின் பின்னர் நீதிமன்றத்துக்கு கொண்டு சென்று என்னை விடுதலை செய்தார்கள். 26 நாட்கள் பயங்கரவாத குற்றப்புலனாய்வு பிரிவினரால் மிகக்கொடூரமாக் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். என்னைப்போல் இன்னும் எத்தனையோ ஆயிரம் இளைஞர்கள் யுவதிகள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தொடர் சித்திரவதைகளுக்கு உள்ளானார்கள்.பயங்கரவாத தடைச்சட்டம் வந்த பின்னர்தான் நாம் எமது மக்களை பெருந்தொகையில் இழந்தோம்.60000க்கும் மேற்பட்ட போராளிகளை இழந்துள்ளோம். பலரின் மரணங்களுக்கு காரணமாக இருந்துள்ளது. இதனை தமது கையில் வைத்திருந்த பொலிஸார் செய்த அநியாயங்கள் பலவுண்டு. தென்னகோன் மட்டுமல்ல இந்த நாட்டில் இருந்த பல பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸார் மிக மோசமாக நடந்து கொண்டார்கள் என்பதற்கு பல வரலாறுகள் உண்டு . பல படுகொலைகளுக்கு காரணம் உண்டு .

செம்மணியில் நேற்று வரைக்கும் 135 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. 1 ஆம் திகதி நான் செம்மணியை சென்று பார்வையிட்டேன். கடந்த திங்கட்கிழமை ஸ்கான் செய்யும் இயந்திரம் மூலம் சித்துப்பாத்தி மயானமும் அதனை அண்டிய பகுதிகளும் ஆய்வு செய்யப்பட்டன. இந்நிலையில் இங்கு இன்னும் பல எலும்புக்கூட்டு வயல்கள் இருப்பதாக தகவல்கள் சொல்லியுள்ளன. அவ்வாறானால் இவ்வாறு தமிழர்களுடைய எலும்புக்கூட்டுத் தொகுதிகள் வெளிவரக் காரணமாக உள்ள கொலையாளிகள் யார்? இக்கொலைகளை யார் செய்தார்கள்?

தேசபந்து தென்னகோனுக்கு எதிராக நீங்கள் கொண்டுவரவுள்ள நீதியை தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு கொண்டுவர நீங்கள் தயார் இல்லை. அந்த தெளிவான மனநிலை உங்களிடம் இல்லை. இதில் ஒரு சர்வதேச மேற்பார்வையை கொண்டுவாருங்கள் என்று கேட்டால் கூட அரசு அதில் தெளிவில்லாத நிலையில் உள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 'வீரகேசரி' பத்திரிகையை சபா பீடத்திற்கு சமர்ப்பிக்கின்றேன். அதில் "சர்வதேச விசாரணைக்கு சாட்சியமளிக்கத் தயார்" கிருஷாந்தி குமாரசாமி வழக்கின் பிரதான குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ச அறிவித்துள்ளார். அவருடைய மனைவி அரசுத் தலைவர்க்கு கடிதம் என்ற செய்தி வந்துள்ளது. அவருடைய மனைவி அரசுத் தலைவர்க்கு, பிரதமருக்கு, நீதி அமைச்சருக்கு சிங்களத்தில் எழுதிய கிட்டத் தட்ட 6 பக்கங்களைக் கொண்ட கடிதத்தையும் சபாபீடத்திற்கு சமர்ப்பிக்கின்றேன். அவர் குறிப்பிடுகின்றார். இங்கே நடந்த மிக மோசமான மனிதப் படுகொலைகளுக்கு சாட்சியமளிக்க சர்வதேச நீதிமன்றத்துக்கு வரத் தயார் என்கின்றார்.

சோமரத்ன ராஜபக்ச சட்டவிரோதமாகத் தண்டிக்கப்படுகின்றார். ஆகவே செம்மணி தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றை முன்னெடுக்க வேண்டும்.அதில் நான் சாட்சியமளிக்க தயார் என எனது கணவர் தெரிவித்துள்ளார் என திருமதி விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார் .எனவே தேசபந்து தென்னகோன் மட்டுமல்ல. இங்கு நடந்த தமிழினப் படுகொலைகள்.கட்டமைக்கப்பட்ட இனவழிப்புகளுக்கும் நீதி விசாரணை வேண்டும். ஆகவே இந்த செம்மணி விவகாரத்தில் சோமரத்ன ராஜபக்சவை நீங்கள் சர்வதேச விசாரணைக்கு தயார்படுத்துங்கள். உண்மைகள் வெளியே வரட்டும்.ஆளும்தரப்பின் நிலைப்பாடு என்னவென்பதை அறிவிக்க வேண்டும் - என்றார்.

## இளைஞர் கழக....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் கேள்வி எழுப்பி உரையாற்று கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 2-11/25/01 மூலம், 2025 மே 23 க்கு முன்பு தாபிக்கப்பட்ட சகல இளைஞர் கழகங்களின் சட்டப்பூர்வத்தன்மையையும் இரத்துச்செய்து, புதிய இளைஞர் கழகங்களை தாபித்தல் அல்லது மறுசீரமைத்தல் செயல்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது சகல இளைஞர் கழகங்களும் அரசியல் மயமாக்கலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கத்தின் மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, அரசியல் நலன்களின் அடிப்படையில் இளைஞர் கழகங்களுக்கு நிறைவேற்று தர உத்தியோகத்தர்களை நியமிக்கும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த இளைஞர் கழக அமைப்பினது இறையாண்மை மற்றும் ஜனநாயக செயல்பாட்டை ஆபத்தில் ஆழ்த்தி, புதிய கட்டளைகள் மூலம் தமது அரசியல் நண்பர்களுக்கு நன்மையைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியாக இது தெரிகிறது. எனவே, இது தொடர்பாக ஆளும்தரப்பு இந்த சபையில் அதுதொடர்பான விளக்கத்தை வழங்க வேண்டும் என்பதை நான் இங்கு வலியுறுத்துகிறேன்.

இதன்பிரகாரம், பின்வரும் கேள்விகளுக்கு அரசாங்கத்திடமிருந்து குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கிறேன்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் இலக்கம் 2-11/25/01 இன் கீழ் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் கீழ், புதிய இளைஞர் கழகங்களை தாபித்தல் அல்லது மறுசீரமைத்தல் நடவடிக்கைகளின் போது இளைஞர் கழகங்கள் அரசியல்மயமாக்கப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டுகளை ஆளும்தரப்பு ஏற்றுக்கொள்கிறதா?

அவ்வாறில்லையெனில், நாட்டில் காணப்படும் பல இளைஞர் கழகங்களில் (களுத்துறை, பொலன்னறுவை, பதுளை, கேகாலை, கம்பஹா, அம்பாந்தோட்டை, நுவரெலியா, கொழும்பு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களில்) நிறைவேற்று தர உத்தியோகத்தர் பதவிகளுக்கு தனது அரசியல் நண்பர்களை மட்டுமே நியமிக்கும் திட்டத்தை முன்னெடுத்து வருவதானது ஆளும்தரப்பு இளைஞர் கழகங்களை அரசியல்மயமாக்குவதைக் குறிக்காதா?

அல்லது, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் 2025.05.16 திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட கடிதத்தின் மூலம் 2025.05.23 க்கு முன்னர் தாபிக்கப்பட்ட சகல இளைஞர் கழகங்களின் சட்டபூர்வமான தன்மையையும் இரத்துச்செய்து, புதிய இளைஞர் கழங்களைத் தாபித்தல் அல்லது மறுசீரமைத்தல் நடவடிக்கையில் அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் யாது?

சகல இளைஞர் கழகங்களுக்கும் பொருந்தக்கூடிய நிலையியற் கட்டளைத் தொகுப்பை தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் முன்வைத்துள்ளதா? அந்த நிலையியற் கட்டளைகள் இந்தச் சபையில் சமர்ப்பிக்கப்படுமா?

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய நிலையியற் கட்டளைகள் மூலம் இளைஞர் கழகத்தில் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர் பதவியை வகிப்பதற்கு குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் செயற்பாட்டு உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற விதிமுறைகள் மாற்றப்பட்டுள்ளதா? இது வெறுமனே தமது அரசியல் நண்பர்களை இளைஞர் கழகங்களின் நிறைவேற்று தர பதவிகளுக்கு நியமிப்பதற்கு எடுத்த செயல்முறையல்லவா? இளைஞர் கழக யாப்பை மீறும் செயலாக இதை ஆளும்தரப்பு ஏற்றுக்கொள்கிறதா?

கிராம சேவைப் பிரிவுகளிலிருந்து மேல் நோக்கி மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் கால் பதிக்க இளைஞர்களுக்கு களமமைத்த இந்த இளைஞர் கழங்கள் கட்சி சார்பின்றி செயல்பட்டன. எந்த இளைஞரும் இதில் இணைந்து கொள்ளும் நிலை காணப்பட்டது. கட்சி பேதங்கள் இல்லாமல் செயல்பட சிறந்த தீர்வு இளைஞர் சம்மேளனங்களும் இளைஞர் நாடாளுமன்றத்தையும் ஒன்றிணைத்து ஆளும்தரப்பு 150 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கினாலும், 450 மில்லியன் ரூபா மதிப்புள்ள திட்டமாக இது மாற்றப்பட்டது. கிராமத்துக்கு ஒரு கோடி திட்டத்தின் கீழ் 4500 இலட்சம் ஒதுக்கப்பட்டாலும், 9000 இலட்சம் மதிப்புள்ள சேவைகள் இதன் மூலம் ஆற்றப்பட்டுள்ளன என்றார்.

## செம்மணியில் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் மற்றும் எலும்புஎச்சங்களுடன் மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட, தனிநபர்களுடன் தொடர்புடையவை எனக் கருதப்படும் 43 பொருட்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் நேற்று சிந்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டன. இதுவரையில் 54 சான்றுப் பொருள்கள் மீட்கப்பட்டபோதும் தனிநபர் சான்றுப் பொருட்கள் மட்டுமே காட்சிப்படுத்தப்பட்டன. ஏனைய சான்றுப் பொருட்கள் தொடர்ந்தும் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளன.

சான்று பொருட்கள் நேற்று மதியம் 1.30 மணி முதல் மாலை 5 மணி வரையில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றை சுமார் 200 பேர் வரையில் பார்வையிட்டிருந்தனர். காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், இனிவரும் காலங்களிலும் தனிமனிதனோடு தொடர்புடைய சான்றுபொருட்கள் மீட்கப்பட்டால் அவற்றையும் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பார்வையிட்டவர்களில் எவரும் எந்தப் பொருளையும் அடையாளம் காட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சோமரத்ன....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய விபரங்களை வெளியிடுவதற்குத் தனது கணவர் தயாராக இருப்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இவ்விவகாரம் பேசுபொருளாகியிருக்கும் நிலையில், வெலிக்கடை சிறைச்சாலையில் இருக்கும் தனது சகோதரரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் எனவும், அவரது பாதுகாப்பைப் பலப்படுத்துவற்கு சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ள அவரது சகோதரி ரோஹினி ராஜபக்ச, இதுகுறித்து ஆளும்தரப்பு அவதானம் செலுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதுமாத்திரமன்றி கொலைத் தண்டனை விதிக்கப்பட்டு 29 வருடகாலமாக சிறைவாசம் அனுபவித்துவரும் தனது சகோதரர் சோமரத்ன ராஜபக்சவுக்கு கடந்த காலங்களில் சிறைக்கு உள்ளிருந்தும், வெளியே இருந்தும் பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதாகவும், அத்தோடு சில சந்தர்ப்பங்களில் அவரது உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய

தொடர்ச்சி 3ம் பக்கம்...

## சோமரத்ன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதொருபின்னணியில்தற்போது சோமரத்ன ராஜபக்சவின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என அவரது சகோதரி வலியுறுத்தியுள்ளார்.

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பாதுகாப்பு தொடர்பில் எவ்வித பிரச்சினையும் இல்லை. தேசிய பாதுகாப்பு எனும் விடயத்தில் பாதாள உலக குழுக்கள் நேரடியாக தொடர்பு படுவதில்லை. திட்டமிட்ட குற்றச் செயல்கள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

பொலிஸாருக்குதேவையானபாதுகாப்பை ஒரு வரையறைக்கு உட்பட்டு அதனை பெற்றுக்கொடுக்கிறோம்.

தற்போது பாதாள உலகக்குழுக்கள் அதிருப்தி அடைந்துள்ளன.பாதாள உலக குழுக்களை இல்லாதெழிக்கும் தற்போதைய அரசாங்கத்தினால் வேலைத்திட்டத்தினால் அவர்கள் அதிருப்தி அடைந்திருக்க வேண்டும்.பாதாள உலகக்குழுகளுக்கு அரசியல் ரீதியாக பாதுகாப்பு பெற முடியாது உள்ளது. பாதாள உலக்குழுக்களை செயற்படுத்தும் தரப்பினர் தற்போது கைது செய்யப்படுகிறார்கள்.

இதனை கட்டுப்படுத்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் புதிய வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதனை முன்னெடுப்பதற்கான சட்டரீதியான ஒத்தழைப்பையும் இராணுவ வசதிகளையும் நாம் வழங்கி வருகிறோம் என்றார்.

கேள்வி- அரசியல் பாதுகாப்பு கிடைக்கவில்லை என்பதாலா தினமும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகின்றன?

பதில்- ஆம்.இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். பாதாள உலகக்குழுக்கள் அதிருப்தி அடைந்துள்ளன.இது அவர்களுக்கு ஒரு தடையாக இருக்கலாம். இதன் காரணமாக துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்றார்.

## தேசபந்துவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த அரசியல்வாதிகளை ஆளும்தரப்பு பாதுகாத்து வருகிறது. என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமைஇடம்பெற்றஅலுவலர்களை அகற்றுதல்(நடவடிக்கைமுறை)சட்டத்தின்17ஆம் பிரிவின்பிரகாரம், பொலிஸ்மாஅதிபர்தேசபந்து தென்னகோனைபொலிஸ்மாஅதிபர்பதவியில் இருந்து அகற்றுவதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதற்கு அரசமைப்பு பேரவைக்கு அவரது பெயர் பரிந்துரைக்கப்பட்டபோது, அன்று அரசமைப்பு பேரவையில் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் எமது கட்சியின் கபீர் ஹாசிம் ஆகியோர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். என்றாலும் அன்றிருந்த ஆளும்தரப்பு அவரை சட்டவிராதமான முறையில் நியமித்துக்கொண்டபோது, அவரின் பதவியை இடைநிறுத்துமாறு தெரிவித்து எமது கட்சியின் ஹிருனிகா பிரேமசந்திர மற்றும் நிராஷன் பாதுக்க ஆகியோர் உயர் நீதிமன்றில் இடைக்கால தடைஉத்தரவொன்றை பெற்றுக்கொண்டனர். அதனால் தேசபந்து தென்னகோனை பதவி நீக்குவதற்கு நாங்கள் ஆரம்பத்தில் இருந்து சரியான நிலைப்பாட்டில் இருந்தோம்.

ஆனால் அன்று இந்த சபையில் மக்கள் விடுதலை முன்னணி 3 உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைத்துவிடயங்களுக்கும் நீதிமன்றம் செல்வார்கள். ஆனால் தேசபந்து தென்னகோனின் பதவியை இடைநிறுத்த நீதிமன்றம்செல்லவில்லை.ஏன்செல்லவில்லை என்பதை ஜனாதிபதியிடம் கேட்டுப்பாருங்கள். அவர்களுக்கிடையில் இருந்து டீலே இதற்கு காரணமாகும். அதேநேரம் தேசபந்துக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இந்த சபையில்தெரிவிக்கப்பட்டன.அவருக்குஎதிரான விசாரணை குழுவின் அறிக்கையில் டபிள்யு 15 தொடர்பான குற்றச்சாட்டு தொடர்பில் மாத்திரமே தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவருக்கு எதிராக இங்கு தெரிவிக்கப்படாத குற்றச்சாட்டுக்களும் இருக்கின்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குண்டை, களனிகம வெளியேறும் இடத்தில், பாதுகாப்பு தரப்பினரால் தடுத்து நிறுதப்பட்ட லாறியை, விடுவிப்பதற்கு கட்டளையிட்டவர் தேசபந்து தென்னகோன் என்ற குற்றச்சாட்டு ஏன் தெரிவிக்கப்படவில்லை.

அதேபோன்று இளைஞர்களின் போராட்டத்தில் தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக அன்று தேசபந்து தென்னகோன் வழக்கு தொடுத்தவர்கள், இன்றும் நீதிமன்றம் செல்கிறார்கள். அரசியல் தீர்மானம் ஒன்று எடுத்து அவர்களை விடுவிக்க அரசாங்கத்துக்கு முடியாமல்போயிருக்கிறது.அந்தவழக்குகளை வாபஸ்பெற்றுக்கொள்ள ஆளும்தரப்பு ஏன் நடவடிக்கைஎடுக்காமல் இருக்கிறது. அத்துடன் யுக்திய செயற்பாட்டின்போது சட்டத்தை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் ஆளும்தரப்பு விசாரணை மேற்கொள்கிறதா? இதுதொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? . அதனால் ஆளும்தரப்பு குற்றச்சாட்டு உள்ளவர்கள் உயர் பதவிகளுக்கு நியமிக்காத வகையில் சட்டம் கொண்டுவர வேண்டும்.

மேலும் ஆளும்தரப்பின் அமைச்சரவையிலும்குற்றச்சாட்டுஉள்ளவர்கள் இருக்கிறார்கள்.உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டு உள்ளர்களும் அரசாங்கத்தில் இருக்கின்றனர்.அவர்களுக்கு அரசியல் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. ஆளும்தரப்பின் முன்னாள் சபாநாயகரின் கலாநிதி பட்டம் தொடர்பில் விமர்சனம் தெரிவிக்கப்பட்டது. 6 மாதங்களில் அதுதொடர்பானசான்றிதழ்களைசமர்ப்பிப்பதாக தெரிவித்திருந்தார். அதுதொடர்பில் எந்த விசாரணையும் இல்லை. கலாநிதி பட்டம் ஒன்று இருப்பதாக அவர் நாட்டு மக்களை ஏமாற்றியுள்ளார்.

தேசபந்து தென்னகோன் சட்டத்துக்கு அப்பால்சென்றுஇவ்வாறுசெயற்பட, அவருக்கு ஆலோசனை வழங்க அரசியல்வாதிகளும் இருந்தார்கள். அவர்கள் தொடர்பில் யாரும் கதைப்பதில்லை. அன்றிருந்த அரசியல் தலைவர்களின் தேவையை நிறைவேற்றச்சென்றதாலே தேசபந்துக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அரசியல்வாதிகள்பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். தேசபந்து தென்னகோனிடமிருந்து தற்போது அரச அதிகாரிகளுக்கு கற்றுக்கொள்ள பாடம் இருக்கிறது. அரசியல்வாதிகளின் தேவைக்கேற்ப, சட்டத்துக்கு முரணாக செயற்பட்டால் தேசபந்துக்கு இடம்பெற்ற நிலையே ஏற்படும். அவர்களை பாதுகாக்க அரசியல்வாதிகள்யாரும்முன்வரமாட்டார்கள்.

சுகத்தில் இருந்து சட்டவிரோதமான முறையில்வி டுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் எந்த விசாரணையும் ஆரம்பிக்கப்படவில்லை. இதுதொடர்பில் விசாரணை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையைகூட ஜனாதிபதி இதுவரை வெளிப்படுத்தவில்லை. அதேபோன்றுஜனாதிபதியின் செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த வாகனத்தில் அவரின் மனைவி பயணித்து வித்துக்குள்ளாகி இருக்கிறது. சரியாக இருந்தால் ஜனாதிபதி செயலாளர் பதவி விலகி இருக்கவேண்டும். இவ்வாறான விடயங்கள் இடம்பெறாது என்றே ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. ஜனாதிபதியின் செயலாளர் பதவி விலகி முன்மாதிரியைகாட்டவேண்டும்.அதேபோன்று ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் வெளிநாடு சென்றவரும்போது விமான நிலையத்தில்இருந்து மதுபானபோத்தல்களை எடுத்துவந்துள்ளனர்.அவர்களுக்கு எதிராக சரியானமுறையில்சட்டத்தைநிலைநாட்டாமல் அவர்களை இடமாற்றி இருக்கிறார்கள் என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கண்டுகொள்ளப்படாத பொக்கிஷத்தை பணப் பயிராக்கும் பாதை எங்கே?

இலங்கை கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் சமீபத்தில், பனை மரம் என்பது இன்னமும் நாட்டில் முழுமையாகக் கண்டுகொள்ளப்படாத பொக்கிஷம் எனக் குறிப்பிட்டுள்ளார். பனை அபிவிருத்திச் சபையின் ஏற்றுமதியாளர்களுக்கான வருடாந்தக் கூட்டத்தில் அவர் கூறியது, சரியான முறையில் பயன்படுத்தினால் பனை, தேயிலையைவிட அதிக அந்நியச் செலாவணியை இலங்கைக்கு பெற்றுத்தரக்கூடியது என்பதாகும்.

இது கேட்கும் போதே பெருமையும், அதேசமயம் வேதனையும் தருகிறது. பெருமை தருவது என்னவெனில், தேயிலை போலவே, பனைக்கும் உலக சந்தையில் பெரிய இடமுண்டு என்பதைக் குறிக்கும் இந்த அறிக்கை. ஆனால் வேதனை தருவது என்னவெனில், இத்தகைய வளத்தை நாம் பல தசாப்தங்களாக புறக்கணித்துள்ளோம் என்பதே.

அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார் – “இத்தனை நாளும் இருந்தவர்கள் இதனை ஏன் உதாசீனப்படுத்தினர்? சரியான முறையில் இயக்கவில்லை ஏன்?” என்றார். இந்தக் கேள்வி உண்மையில் தற்போதைய ஆளும்தரப்பையும் உள்ளடக்கி கடந்த பல ஆட்சிகளுக்கும் பொருந்தும். கடந்த 11 மாதங்களாக ஆட்சியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தி (NPP) அரசு, இதுவரை பனை வளத்தைப் பற்றி ஒரு முக்கியமான கொள்கை அறிவிப்போ, விரிவான திட்டமோ முன்வைத்ததில்லை.

இப்போதுதான் ‘பனை ஒரு கவனிக்கப்படாத வளம்’ என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கின்றனர் என்றால், எப்பொழுது அதனைப் பணப் பயிராக்கும் நடவடிக்கையைத் தொடங்கப் போகிறார்கள்? நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் ஒரு வாய்ப்பை இவ்வளவு காலமும் புறக்கணித்திருந்தால், அடுத்தடுத்த காலங்களில் அதை செயல்படுத்தும் தகுந்த திட்டக்கோவையை (road map) மக்கள் முன்னிலையில் வைக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

பனை மரம் என்பது வெறும் பழம் தரும் மரம் அல்ல; அதின் இலை, காய், நார், சாறு, மரப்பொருள், அனைத்தும் பயன்பாடுள்ளவை. பனை வெல்லம், பனை சாறு, பனை சர்க்கரை, பனை நார் பொருட்கள், பனை கைவினைப் பொருட்கள், பனை குடிநீர் தயாரிப்பு போன்ற பல்வேறு உற்பத்திகள் உள்ளூர் சந்தையிலும், உலக சந்தையிலும் அதிக தேவை கொண்டவை. தென்னிந்தியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் பனை வளத்தை முழுமையாகப் பயன்படுத்தி, ஏற்றுமதியில் கணிசமான வருமானம் ஈட்டுகின்றன.

இலங்கையில் பனை பெரும்பாலும் வடக்கு, கிழக்கு மற்றும் சில கடற்கரைப் பகுதிகளில் பரவலாக காணப்படுகிறது. ஆனால், அவை பாரம்பரிய கைவினைப் பொருட்கள் அல்லது சிறு அளவிலான வெல்ல உற்பத்திக்குள் மட்டுமே சுருங்கியுள்ளன. பனை வளத்தை தொழில்மயமாக்கும் முயற்சி, ஒருங்கிணைந்த பண்ணை மேலாண்மை, மற்றும் ஏற்றுமதி நோக்கிய உற்பத்தி முறைமைகள் ஆகியவை அரசின் கவனத்திற்கு இதுவரை வரவில்லை என்பதே வருத்தம்.

இதன் அடிப்படையில், தற்போதைய ஆளும்தரப்பு செய்ய வேண்டியது தெளிவாக இருக்கிறது:

தேசிய பனை அபிவிருத்திக் கொள்கை– பனை வளத்தைப் பயன்படுத்துவதற்கான நீண்டகால தேசிய கொள்கையை உருவாக்க வேண்டும்.

உற்பத்தி மற்றும் மதிப்பூட்டல் (Value Addition) – பனைவழி உற்பத்திகளை, உலக சந்தைக்கு ஏற்ற தரநிலைகளில் மதிப்பூட்டும் தொழிற்சாலைகள் அமைக்க வேண்டும்.

பயிர் விரிவாக்கம் – பனை வளர்ப்பு ஏற்ற பகுதிகளில் புதிய நடுகைகளை ஊக்குவிக்க வேண்டும்.

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி – பனை அடிப்படையிலான புதுமையான தயாரிப்புகள், உற்பத்தி முறைகள் குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டு, விவசாயிகளுக்கு பயிற்சி வழங்க வேண்டும்.

ஏற்றுமதி சந்தை விரிவாக்கம்– சர்வதேச வணிக ஒப்பந்தங்கள், சந்தைப் பிரவேச திட்டங்கள் மூலம் பனைப் பொருட்களுக்கு வெளிநாட்டு வாடிக்கையாளர்களை ஈர்க்க வேண்டும்.

இலங்கையில் பனை வளம் பெரும்பாலும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாழ்வாதாரத்துடன் நேரடியாக இணைந்திருப்பதால், இதனை மேம்படுத்துவது பொருளாதார வளர்ச்சியையும், பிராந்திய முன்னேற்றத்தையும் ஒருசேரக் கொண்டு வரும். பனை அபிவிருத்தி என்பது ஒரு விவசாய திட்டமாக மட்டுமல்லாது, சமூக நீதிக்கும், பிராந்திய சமத்துவத்திற்கும் வழிவகுக்கும்.

ஆனால், இதற்கெல்லாம் முக்கியமானது அரசின் அரசியல் மனோபாவம். வெறும் கூட்டங்களில் “பனை ஒரு பொக்கிஷம்” என்று கூறுவது போதாது. அந்தப் பொக்கிஷத்தைப் பயன்படுத்தும் நடைமுறை நடவடிக்கைகள், காலக்கட்டங்களுடன் கூடிய தெளிவான திட்டங்கள், மற்றும் நிதி ஒதுக்கீடுகள் அவசியம்.

11 மாதங்கள் கழித்துதான் பனை வளம் குறித்து அரசின் கவனம் திரும்பியிருக்கிறது என்றால், “இன்னும் எத்தனை வருடங்கள் கழித்துத் தான் செயல்படப்போகிறீர்கள்?’ மக்கள் கேட்பது இயல்பு.” பொருளாதார நெருக்கடியில் வாடும் நாட்டுக்கு, இத்தகைய வளங்களைப் பயன்படுத்துவதில் தாமதிக்க நேரமில்லை. இன்று தொடங்கும் திட்டம்தான் நாளைய வருமானத்தை உருவாக்கும்.

பனை வளத்தைப் பணப் பயிராக்கும் பாதையை அரசே விளக்க வேண்டும். இல்லையெனில், இது ஒரு முறைமையான புறக்கணிப்பாகவே வரலாற்றில் பதியப்படும்.

## செம்மணி சான்றுகளை அடையாளம் காண்பது நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கை

### கொழும்பு ஐ.நா. அலுவலகம் தெரிவிப்பு

செம்மணி மற்றும் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட உடைமைகளை அடையாளம் காண்பதில் பொதுமக்களின் உதவியை நாடுவதற்கான தீர்மானம் உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிய, நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டதோர் நடவடிக்கை ஆகும் என இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

செம்மணி சித்துபாத்தி மற்றும் கொக்குத்தொடுவாய் கூட்டுப்புதைகுழி தளங்களில் இருந்து மீட்கப்பட்ட தனிப்பட்ட உடைமைகளை அடையாளம் காண்பதில் பொதுமக்களின் உதவியை நாடும் தீர்மானம், இலங்கையில் உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டதோர் நடவடிக்கையாகும்.

பல தசாப்தகாலமாக தமது அன்புக்குரியவர்களின் நிலை குறித்து அயராது, திடமாக பதில்களைத் தேடிவரும் காணாமல்போனோரின் குடும்பங்களுடன் இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் உறுதியாக நிற்கிறது. உண்மை மற்றும் நீதியைப் பின்தொடர்வதில் அவர்களது தாங்கும் வல்லமை ஒரு தார்மீக வழிகாட்டியாகத் தொடர்கிறது.

இலங்கை ஆளும்தரப்பு, குறிப்பாக காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் தமது பணியை வெளிப்படைத்தன்மையுடனும், விரைவாகவும், காணாமல்போனோரின் குடும்பங்களுடனான அர்த்தமுள்ள ஆலோசனைகளுடனும் நிறைவேற்ற வேண்டும் என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## அரச பாடசாலைகள் மூடப்படாது

### பிரதி அமைச்சர் உறுதிமொழி

அரசபாடசாலைகள் மூடப்படமாட்டாது என்றும் 50 மாணவர்களுக்கு குறைவாக உள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளதாகவும் கல்வி, உயர்கல்வி பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைகள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது மக்கள் பிரதிநிதிகள், பிரதேச ஒருங்கிணைப்புக் குழு, பிரதேச செயலாளர், கிராம சேவை உத்தியோகத்தர்கள் என அனைவரும் ஒன்றிணைந்தே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வாறு தீர்மானங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் சில வேளைகளில் 50 மாணவர்களுக்கும் குறைவான எண்ணிக்கை உள்ள பாடசாலைகளை நடத்திச் செல்வது தொடர்பிலும் ஆராயப்படும்.

தற்போதைய ஆளும்தரப்பு கல்விக்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்திலேயே செயற்படுகிறது. பாடசாலைகளை மூடி விடுவது நோக்கம் அல்ல.

அத்துடன் பாடசாலைகளை நடத்திச் செல்லும் நடவடிக்கைகளை கல்வியமைச்சினால் மட்டும் முன்னெடுத்துச் செல்ல முடியாது. அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமாகும் என்றார்

## முன்னாள் எம்.பிக்களின் உறவினர்கள் வெளிநாட்டில் படிக்கவும் அரச நிதி

### பிரதி அமைச்சர் அருண கருணாதிலக்க வெளிப்படுத்தல்

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டம் அல்லது பிற உயர் கல்வியை நிறைவேற்றுவதற்காக அரசுத் தலைவர் நிதியத்தில் இருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு கடந்த 2005ஆம் ஆண்டு முதல் 2014 வரை 195,7 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என பிரதி அமைச்சர் அருன கருணாதிலக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் சவீந்திர பண்டார கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கலாநிதிப்பட்டம் அல்லது பிற உயர் கல்வியை நிறைவேற்றுவதற்காக அரசுத் தலைவர் நிதியத்தில் இருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் 2014 வரை 195,7 மில்லியன் (195 747 480.61) ரூபா வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு நிதி வழங்கப்பட்டுள்ளவர்களின் பட்டியலை சபைப்படுத்துவதுடன் ஒருசிலரின் பெயர் விபரங்களை மாத்திரம் தெரிந்துகொள்வதற்காக தெரிவிக்கிறேன்.

அந்த வகையில், 2005ஆம் ஆண்டு கம்பஹா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத்சந்திர ராஜகருணா அவரின் பிள்ளையான ஹர்ஷண சபுன் ராஜகருணாவுக்கு அரசுத் தலைவர் நிதியத்தில் இருந்து புலமைப்பரிசிலாக 5இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. 2006இல் கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கருணாசேன கொடிதுவக்கு அவரின் பிள்ளை அல்லது உறவினரான ஐ.என். கொடிதுவக்குவுக்கு ஒரு மில்லியன் இரண்டு இலட்சம் ரூபா வழங்கப்பட்டிருக்கிறது.

அதே ஆண்டில் முன்னாள் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பி இராதாகிருஷ்ணன் அவரின் அவரின் பிள்ளை அல்லது உறிவினர் திருமதி கே, இராதாகிருஷ்ணனுக்கு 8இலட்சத்தி 3ஆயிரத்தி 6ரூபா, 3இலட்சத்தி 96ஆயிரத்தி 994 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புலமைப்பரிசில் பெற்று வெளிநாடுகளில் கலாநிதி பட்டம் பெற்றவர்கள் மீண்டும் நாடு திரும்பியோர், திரும்பாதோர் தொடர்பான தகவல்கள் இல்லை. என்றாலும் இதுதொடர்பாக எதிர்காலத்தில் தேடிப்பார்த்து, அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியுமாக இருந்தால், அதுதொடர்பில் செயற்படுவோம் என்றார்.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

## விசா முடிந்தும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் சுசந்த குமார நவரத்ன எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமது விசா காலம் முடிவடைந்துள்ள நிலையிலும் நாட்டில் தங்கியுள்ள நபர்கள் தொடர்பில் தொடர்ந்தும் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குடிவரவு, குடியகல்வு சட்டத்தின்படி அவ்வாறு தங்கியுள்ளவர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கான பணிப்புரைகள் மேற்படி திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களாக பொலிஸ் துறை, குடிவரவு,குடியகல்வு திணைக்களம், அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை, அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான செயலகம், தேசிய பொலிஸ் பயிற்சி நிலையம் ஆகியன காணப்படுகின்றன.

அந்தவகையில் தற்போதைய ஆளும் தரப்பு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் மேற்படி நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளின் எண்ணிக்கை ஸ்ரீலங்கா பொலிஸ் 28, குடிவரவு, குடியகல்வு திணைக்களம்149,

அந்த வகையில் பொலிஸ் துறையானது துப்பாக்கிகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மனித படுகொலைகள், ஆயுதங்களைப் பயன்படுத்தி தடைசெய்யப்பட்ட விலங்குகளை வேட்டையாடுதல் ஆகியவை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்கிறது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களமானது விசா காலம் முடிந்த பின்னும் நாட்டில் தங்கியிருப்போர் தொடர்பில் மற்றும் விசா நிபந்தனைகளுக்கு முரணான வகையில் நாட்டுக்கு வருவோர், கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளுக்காக தவறான ஆவணங்களை வழங்குவோர் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

அந்த வகையில் பொலிசார் மனித படுகொலைகள் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை 241, காயங்களுக்குள்ளானோர் தொடர்பான விசாரணைகளில் கைதுசெய்யப்பட்டோர் 180 பேர், தடை செய்யப்பட்ட விலங்குகளை வேட்டையாடிய குற்றம் தொடர்பில் 4 பேர் என மொத்தமாக 425 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களமானது வியட்நாம் பிரஜைகள் 23 பேரை கைது செய்துள்ளதுடன் இரண்டு பாகிஸ்தான் பிரஜைகள், 106 பங்களாதேஷ் பிரஜைகள், 56 இந்தியர்கள், 4 சீனப் பிரஜைகள் 6 தாய்லாந்து பிரஜைகள், 2 பிலிப்பைன்ஸ் பிரஜைகள், பிருந்தி 2 , கென்யா 2,ஒரு எத்தியோப்பியப் பிரஜை, ஒரு உகண்டா பிரஜை, ஒரு நேபாள பிரஜை , மூன்று ரஷ்ய பிரஜைகள், ஒரு நெதர்லாந்து பிரஜை, இரண்டு யேமன் பிரஜை, இஸ்ரேல் நான்கு பிரஜைகள் , அவுஸ்திரேலியா 1, இத்தாலி ஒன்று, சூடான் ஒன்று என 219 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் பொலிஸ் துறையில் மனித படுகொலைகள் தொடர்பில் 23 பல்வேறு ரக துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றார்.

## செம்மணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுவரும் தோண்டும் நடவடிக்கைகளின் இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் பாதியில் கடந்த 16 நாட்களாக மட்டும் 65 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி பகுதியில் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01' மற்றும் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02' என நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்ட பணிகளுக்காக 45 நாட்கள் நீதிமன்றினால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று 31ஆவது நாள் பூர்த்தியானது. அகழ்வு பணிகள் இதுவரை இரண்டு கட்டங்களில் 40 நாட்கள் முழுமையடைந்துள்ளன.

இதில், 141 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 130 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

## குற்றவாளியான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி வைப்பாராயின் இந்த நாட்டில் பொலிஸ்மா அதிபர் பதவி எதற்கு? இவ்வாறான நபரை தான் ரணில்-ராஜபக்சர்கள் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமித்தார்கள். அடிப்படை மனித உரிமை மீறல் குற்றவாளியான தேசபந்து தென்னக்கோன் சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டியவர் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கறுப்பு வரலாற்றினை கொண்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்குவதற்காக சட்ட ரீதியிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு சிறப்புக்குழுவின் தீர்மானம் கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்கமைவாகவே அவர் பதவி நீக்கப்படுவார்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தில் இன்றும் விசாரணையில் உள்ளன. தேசபந்து தென்னக்கோன் கடந்த காலங்களில் யுக்திய சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டார். இது சாதாரண மக்களை மாத்திரம் இலக்காக் கொண்டு செயற்படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணத்தை பெற்றுக்கொடுப்போம்.

சுங்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் பற்றி பேசப்பட்டது. இந்த கொள்கலன்கள் விடுவிப்பில் முறைகேடு இடம்பெற்றுள்ளமை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவினால் தான் வெளிப்படுத்தப்பட்டது. எதிர்க்கட்சிகள் ஒன்றும் எதனையும் வெளிப்படுத்தவில்லை. குற்றவாளிகளுக்கு எமது பெரும்பான்மை பலத்தால் ஒன்றும் செய்ய முடியாது. சட்டத்தின் பிரகாரமே நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தேசபந்து தென்னகோனின் பின்னணியில் இருந்த அரசியல் அதிகாரிகள் பற்றி எவரும் பேசுவதில்லை. ரணில், கோட்டா மற்றும் ராஜபக்சர்கள் தான் தேசபந்துக்கு சார்பாக செயற்பட்டார்கள். அரச அதிகாரிகள் அச்சமில்லாமல் சிறந்த முறையில் செயற்பட வேண்டும். என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறோம். ஊழலற்ற அரச நிர்வாகத்தை உருவாக்க அரச அதிகாரிகள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்ட விவகாரம் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டது. அரசமைப்பு பேரவையில் முறையற்ற வகையில் செயற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்னவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டது. அன்று அந்த நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடித்தவர்கள் தான் இன்று தேசபந்துக்கு ஆதரவாக செயற்படுகிறார்கள்.

தேசபந்து தென்னக்கோன் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் மாத்தறை வெலிகம டபிள்யூ 15 ஹோட்டல் மீதான துப்பாக்கிச்சூட்டு சம்பவம் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. சட்டவிரோதமான முறையில் தான் பொலிஸ் அதிகாரிகள் மாத்தறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். சட்டவிரோதமான முறையில் செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை பாதுகாக்கும் வகையில் தேசபந்து செயப்பட்டுள்ளமை குழுவின் விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் பொலிஸ்மா அதிபர் சட்டவிரோதமான முறையில் சிவில் பிரஜைகள் உள்ள பகுதியில் துப்பாக்கிச்சூட்டை மேற்கொள்ள பொலிஸ் அதிகாரிகளை அனுப்பி வைப்பாராயின் இந்த நாட்டில் பொலிஸ்மா அதிபர் பதவி எதற்கு. இவ்வாறான நபரை தான் ரணில்- ராஜபக்சர்கள் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமித்தார்கள். அடிப்படை மனித உரிமை மீறல் குற்றவாளியான தேசபந்து தென்னக்கோன் சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டியவர் என்றார்.

# மனைவியைக் கொன்றவருக்கு கொலைத் தண்டனைத் தீர்ப்பு

## திருகோணமலை மேல் நீதிமன்றம் வழங்கியது

*மனைவியை கொலை செய்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக அடையாளங்காணப்பட்ட கணவருக்கு திருகோணமலை மேல் நீதிமன்றம் நேற்று கொலைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அப்துல்லாஹ் இந்த தீர்ப்பை வழங்கி உத்தரவிட்டார்.*

*திருகோணமலை கந்தளாய் பகுதியில் 2019ஆம் ஆண்டு தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்ததாக குறித்த நபர் மீது வழக்கு தொடரப்பட்டிருந்தது.*

*விசாரணைகளில் 39 வயதான பிரதிவாதி கொலையாளிஎன உறுதிசெய்யப்பட்டதால் சந்தேகநபருக்கு மரண தண்டனை விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.*

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.08.2025இல் வெளியிடப்பெற்றது